## அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் 1 - 2015

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் I இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆந் திகதிய எஸ்எல்- பி 110 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. வடக்கு அநுராதபுரப் பகுதியில் பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் அவற்றின் மூலம் அப்பகுதியில் சுத்திகரிப்பு நிலை மற்றும் சுகாதார நிலைமைக்கு பங்களிப்பு செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தில் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,515 மில்லியனிற்கு சமமான ஜபபான்.ஜென் 6,817 மில்லியனானதுடன் அதில் ரூபா 8,726 மில்லியனிற்கு சமமான ஜப்பான்.ஜென் 5,166 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 பெப்ரவரியில் ஆரம்பித்திருந்ததுடன் 2018 பெப்ரவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய

கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

2015 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 6.61 மில்லியன் கூட்டுத் தொகையான பெறுமதி சேர் வரி நடைபெறும் வேலையின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1. நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் இல் உள்ளவாறு | |
| | ஐ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஐசீஏ | 5,166 | 8,726 | - | 91.24 | 101.52 | 293.42 | 347.52 |
| இலங்கை அரசாங்கம் | 1,651 | 2,789 | - | 39.97 | 44.37 | 106.64 | 125.44 |
| மொத்தம் | 6,817 | 11,515 | - | 131.21 | 145.89 | 400.06 | 472.96 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடுகளில் நிதிகள் எதுவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காத போதிலும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 145.89 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் செலவின பட்டோலையின் 42 ஆம் பந்தியின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 வரை ஜப்பான்.யென் 791 மில்லியனை விடுவிப்பதற்கு உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் மூலமான உள்ளபடியான நிதிகளின் பயன்பாடு ஒதுக்கப்பட்ட தொகையின் 37.09 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 347.52 மில்லியனிற்கு சமமான ஜப்பான்.யென் 293.42 மில்லியன் தொகையாகும். மேலும், 2015 திசெம்பர் 31 வரை பயன்படுத்தப்படாத ஒதுக்கீடுகளில் கடனளிக்கும் முகவரால் ரூபா 13.28 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

### 3.2. பௌதீகச் செயலாற்றல்

செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 21.59 சதவீதம் மற்றும் 4.42 சதவீதமாக இருந்தது. குறித்த காலத்திற்குள் செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கு அமுலாக்கும் தரப்பினருக்கான பொறுப்புக்களை நிர்ணயிக்கின்ற மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு போன்ற ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் முழுச் செயற்திட்டக் காலத்தையும் மேவி முழுமையான செயல்நடவடிக்கைத் திட்டம் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடங்கிய திகதியிலிருந்து 03 ஆண்டுகள் கடந்த பின்னரும் தயரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், தண்ணீர் தேக்கங்கள், தண்ணீர் சுத்திகரிப்பு பொறி, உயர்த்தப்பட்ட தண்ணீர் தொட்டிகள் மற்றும் பரிமாற்றரிகளிடல் மற்றும் விநியோக வழிகள் போன்ற சிவில் வேலைகள் எதுவும் 2016 யூலை 31 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை

### 3.3. ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் அமுலாக்கல் பட்டியலின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம், செயற்திட்டத்தின் ஆலோசனை சேவைகளிற்காக பொருத்தமான சேவை வழங்குநரினை உட்சேர்த்தல் 2013 செப்தெம்பர் மாதத்திற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், ஆலோசனை

சேவைகளிற்கான ஒப்பந்தம் 09 மாதங்கள் காலதாமதத்துடன் 2014 யூன் 13 இலேயே வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், செயற்திட்டத்தால் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட சகல ஒப்பந்தங்களிற்காகவும் விரிவான வடிவமைப்பு மற்றும் வரைவு கேள்வி ஆவணங்களின் தயாரிப்பு குறிப்பிடத்தக்க தாமதங்களுடன் தொடங்கப்பட்டிருந்தது.

(ஆ) நீர் தேக்க வசதி, தண்ணீர் சுத்திகரிப்பு பொறி, தண்ணீர் தேக்கி வைத்தல் மற்றும் நிறைவேற்றுனர் விடுதிகள் காணி ஆணையாளர் திணைக்களத்தால் மஹாகந்தர ஒதுக்கத்திற்காக பிரேரிக்கப்பட்ட காணிக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்காமை காரணமாக 2016 யூலை 31 வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அரசாங்க மதிப்பீட்டாளராலட அவற்றில் செய்யப்பட்ட ரூபா 977,500 ஆன மதிப்பீட்டை கருத்திற்கொள்ளாமல் காணியின் சுவீகரிப்பிற்காக அப்பகுதியில் வசிப்பவர் ஒருவருக்கு ரூபா 2 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் அமுலாக்கல் பட்டியலின் பிரகாரம், உயர்ந்த பாதுகாப்பு பிரதான பொலிஎதிலீன் வழங்கல் மற்றும் இடல், துணைப் பிரதானம் மற்றும் பிரதான விநியோகம் என்பவற்றிற்கான ஒப்பந்தம் 2015 யூன் 30 இல் தொடங்குவதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய ஒப்பந்தங்கள் 2016 யூலை 31 வரை வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இசின்பெஸ்சஹல, எத்தகனட மற்றும் றம்பேவ விநியோக வலயங்களில் விநியோக முறைமையை வழங்கி பொருத்துவதற்கான ஒப்பந்தங்கள் 2015 மே 31 இற்கு முன்னர் வழங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டம் 2016 யூலை 31 வரையும் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.